பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹு ஐப்பசி மீ 02 உ வெள்ளிக்கிழமை (19 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 29 கதிர்: 226

# வயாவிளான் பகுதியில் மோதல் தொடர்கிறது!

## படையினருக்கு பெரும் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 19

ஸ்ரீலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வயாவிளான் சந்திப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக கடும் மோதல் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 13 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

ஸ்ரீலங்காப் படைகள் தரப்பில் பெரும் இழப்பு ஏற்பட்டிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் [புதன்கிழமை] காலை 6 மணிக்கு சுமார் எண்ணூறுக்கும் அதிகமான இராணுவத்தினர் பலாலி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டனர். அவர்கள் விமான நிலையப் பாதையைக் கடந்து இடைக்காட்டுப் பக்கமாக முன்னேறி, ஒட்டகப்புலம் பகுதியை அடைந்தனர். பின்னர் அங்கிருந்து வயாவிளான் சந்திக்கு வந்தனர்.

வயாவிளான் சந்திப் பகுதிக்கு படையினர் முன்னேறியதை அடுத்து அப் பகுதியில் இருந்த விடுதலைப் புலி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உரும்பராயில் பொம்மர் தாக்கு; இளம்பெண் உட்பட இருவர் பலி

உரும்பராய், அக். 19

உரும்பராயில் நேற்றுக் காலை இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

காலை 7.15 மணியளவில் ஞானவைரவர் கோவிலுக்கு முன்பாக ஒரு பொம்மர் குண்டு வீசித்தாக்கியது.

இக்குண்டு வீச்சில் வீடொன்றின் முன்பகுதி முற்றாகச் சேதமானது. வீட்டின் ''பிளாட்டுக்கு'' கீழே பாதுகாப்புக்காக நின்ற இளம் பெண் ஒருவரும் மற்றொருவரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

உரும்பராய் செல்வபுரத்தைச் சேர்ந்த செல்லன் அம்பிகா (19 வயது), சித்தன் கேணியைச் சேர்ந்த பொன்னம்பலம் பத்மநாதன் (39 வயது) ஆகியோரே உயிரிழந்த இருவரும் ஆவர்.

உயிரிழந்த இளம் பெண் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகிலுள்ள ப. நோ. கூ. சங்கக் கிளையில் பொருள்களை வாங்குவதற்காக முன் கூட்டியே வந்து நின்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கக் கடையில் கூடியிருந்த பலரும் அருகிலுள்ள பாதுகாப்பான வீடுகளுக்கு ஓடினர்.

ஒரு வீட்டின் ''பிளாட்'' டுக்கு கீழே தஞ்சமடைந்த போதே அந்த வீட்டை நோக்கிக் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மானிப்பாய், கோப்பாய் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்போர் வருமாறு:

சிவஞானம் (40 வயது).

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அங்கிலிகன் தேவாலயமும் மண்டபமும் முற்றாகச்சேதம்

உரும்பராய், அக். 19

உரும்பராயில் பலாலிவீதியிலுள்ள அங்கிலிகன் தேவாலயமான பரிசுத்த இம்மானுவேல் ஆலயமும், சபை மண்டபமும் நேற்றுக்காலை 9-15 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சினால் முற்றாகச் சேதமடைந்தன.

இந்தத் தேவாலயம் கடந்த 1987ஆம் ஆண்டிலும் இந்தியப்படையினரின் குண்டுவீச்சு மற்றும் ஷெல் வீச்சினால் சேதமடைந்தது.

பல லட்சம் ரூபா செலவில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மல்லாகத்திலும் இருவர் பலி!

மல்லாகம் 7 ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற குண்டுவீச்சில் இளைஞர் ஒருவரும், யுவதி ஒருவரும் பலியானார்கள்.

ச. விமலச்சந்திரன் (வயது 30), சு, சந்திராதேவி (வயது 15) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

இத்தாக்குதலில் சு. பத்மாவதி (வயது 12) என்ற சிறுமியும்பரமேஸ்வரன் (வயது 30) என்ற இளைஞனும், வேதநாயகி சதாசிவம் (வயது 60)

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டுவன் பகுதியில் நேற்று சீனச் சகடை குண்டுமாரி!

ஏழாலை, அக் 19

கட்டுவன், ஊரங்குனைப் பகுதிகளில் நேற்று இராட்சத சீனச்சகடை விமானம் அடுத்தடுத்து குண்டுகளைப் பொழிந்து தள்ளியது.

குண்டு வீச்சில் ஊரங்குனைப் பகுதியில் ஒருவர் உயிரிழந்தார். தம்பிஐயா (60 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

காலை 6.15 மணிக்கு தாக்குதல் ஆரம்பமானது.

ஏழாலை தெற்குக் கட்டுவன் பகுதி செல்லன்கடைச் சந்தியிலும் குண்டு ஒன்று விழுந்தது.

இதனால் ஒரு கடை முற்றும் 3 வீடுகளும் முற்றாகச் சேத

[4 ஆம் பக்கம் பார்க்க]

### அச்சுவேலி: பீப்பாய் குண்டு

அச்சுவேலியிலும் நேற்றுக் காலை அவ்ரோ விலிருந்து பீப்பாய்க் குண்டுகள் வீசப்பட்டன.

வீசப்பட்ட இரு குண்டுகளும் சனநெருக்கம் மிக்க இடங்களில் விழுந்த போதிலும் அவை வெடிக்கத் தவறியதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

நரசிங்க வைரவர் கோவிலடி விளாங்கியவத்தை ஒழுங்கையிலும், அச்சுவேலி காலாளைவீதியில் உள்ள வளவிலும் இக் குண்டுகள் விழுந்தன.

[illegible] தியில் ஒரு வித நெடி வீசிக் கொண்டிருந்தது. (உ-11)

## ★ இவர்களுக்கு நிவாரணம் இல்லையாம்

மாதாந்தம் 1,500 ரூபாவுக்கு மேல்வருமானம் பெறும் அரச ஊழியர்களுக்கு இலவச நிவாரணம் வழங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

யாழ்-அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று மாலை அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு. கே. நேசையாவுடன் தொடர்பு கொண்டபோது இது பற்றி தெரிவிக்கப்பட்டது. (அ-3-5)

## மயிலிட்டியிலும் சண்டை

மயிலிட்டிப் பகுதி ஊடாகவும் படையினர் நேற்று வெளியேறி முன்னேற முயன்றனர்.

தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தியபடி படையினர் முன்னேறுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தனர்.

படையினரை முன்னேற விடாது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர். (ஒ-68)

## 13 போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 19

நேற்றும், நேற்று முன்தினமும் வயாவிளான் பகுதியில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பதின்மூன்று பேர் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் ராபீக் [ஸ்ரீபாலசுப்பிரமணியம் அன்பழகன் - நெல்லண்டை, பருத்தித்துறை], ஷெல்டன் [யேசுதாஸ் அன்ரனி ஜ... யிற் -நாவாந்துறை], விக்டர் [கமலமுத்து பத்மநாதன் - உடப்பு, புத்தளம்], ஐயன் [பாலசுப்பிரமணிய சர்மா சுந்தரராஜசர்மா - புத்தூர் மேற்கு] நஸார் [மூளாய்], கிஷோகன், [செல்லையா சற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நாள் முழுதும் ஓய்வில்லாமல் வலி வடக்கில் விமான தாக்கு

காங்கேசன்துறை, அக். 19

பலாலி இராணுவ முகாம் சுற்றாடலில் நேற்றும் 4ஆவது நாளாக விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. நேற்று அதிகாலை தொடக்கம் இரவு வரை தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்கள் நடந்தன.

அதிகாலை 5-30 மணிக்கு பலாலி முகாம்பகுதியில் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. அதையடுத்து மாலை 6 மணியளவில் சீனச்சகடை விமானம் வந்து குண்டுகளைப் பொழிந்தது.

கட்டுவன், குரும்பசிட்டி, வசாவிளான், தையிட்டி, மயிலிட்டிப் பகுதிகளில் 6 குண்டுகள் வரை வீசிய இவ்விமானம் அங்கிருந்து செல்ல 6-30 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று வந்தது.

இவ்விமானம் பலாலி முகாம் சுற்றாடலில் 5 குண்டுகளை வீசியது.

பின்னர் காலை 8 மணியளவில் இரு பொம்மர்கள் இப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருநெல்வேலிப் பகுதியில் 5ஆவது தடவையாகத் தாக்கு

திருநெல்வேலிச் சந்தைக்கு முன்பாக - சுமார் 75 யார் தூரத்தில் - நேற்றும் காலை 7 மணியளவில் பொம்மர் விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

ஏற்கனவே இப்பகுதியில் 4 தடவை தாக்குதல்கள் நடந்துள்ளன. நேற்றைய தாக்குதல் 5 ஆவது தடவையாகும்.

நேற்று இப்பகுதியில் 2 குண்டுகள் வீசப்பட்டன. எனினும் உயிரிழப்புகள் நிகழவில்லை.

சந்தை வியாபாரி ஒருவர் காயமடைந்தார்.

ஒரு குண்டு விழுந்ததில் இரு வீடுகள் ஓரளவு சேதமடைந்தன. இரண்டாவது குண்டு வெளியான தோட்டத்தில் விழுந்தது.

சந்தையில் கூடியிருந்த பெருமளவிலான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிவிட்டதால், அனர்த்தம் ஏதும் ஏற்படவில்லை. (ஒ-143)

## அகதிகளுடன் இரு படகுகள் கடற்படையால் மூழ்கடிப்பு

யாழ்ப்பாணம் அக். 19

கடந்த செவ்வாயன்று திருகோணமலை மாவட்டம் திரியாயில் இருந்து முல்லைத்தீவு மாவட்டம் செம்மலையை நோக்கி ஏழு படகுகளில் சென்ற தமிழ் அகதிகள் மீது கடற்படைப் படகுகள் பீரங்கித் தாக்குதல்களை நடத்தின.

அதனால் இரண்டு படகுகள் கடலினுள் மூழ்கின. அதில் வந்த அகதிகள் அனைவரும் உயிரிழந்தனர்.

மற்றைய ஐந்து படகுகளிலும் வந்த தமிழர்களைக் கைது செய்த கடற்படையினர், அவர்களை முகாமில் இரண்டு நாட்கள் த[illegible] வைத்த பின்னர் வி[illegible]த்து [illegible]வித்தனர்.

— விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத் தகவலை வெளியிட்டன. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### வாங்கலாம் விற்கலாம்

பழைய இடத்திலேயே நாளாந்தம் திறந்திருக்கும். பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும் Senathi Raja. Secondhand Book House. 13/4. ஸ்ரான்லி றோட், முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் லேன், யாழ்ப்பாணம். (14495)

### வாடகைக்கு உண்டு

ஆஸ்பத்திரிவீதி, கோவில் வீதி சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு C/o 149 உதயன், யாழ்ப்பாணம். (14490)

### போட்டோஸ்ரற்

தரமாக எந்த அளவிலும் உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் முன் பக்கம், மக்மிலன் புத்தக சாலை, ஓட்டுமடம். (சி/5314)

### அறிவித்தல்

ABCDE விவாகப் பொருத்துனர் காரியாலயம் 328 நாவலர் வீதியில் மீண்டும் இயங்கத்தொடங்கி உள்ளது. சனிக்கிழமை தவிர்ந்த நாட்கள் 2 மணிவரை தொடர்பு கொள்ளவும். (14488]

### TOEFL

கலை நிதி போட்டரினால் நடாத்தப்படும் வார இறுதிப் பயிற்சி வகுப்புக்கள் 20 - 10 - 90 அன்று ஆரம்பமாகும். சில வெற்றிடங்களே உண்டு தொடர்பு: இவ்லின் இரத்தினம் நிறுவனம். டயஸ் வீதி, (பல்கலைக்கழக ஒழுங்கை) திருநெல்வேலி. (14466)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
17 - 4 - 1929
மறைவு:
19 9 1990

அமரர்
**சின்னத்தம்பி இராஜரெத்தினம்**
[உரிமையாளர் S V S கொம்பனி, கொழும்பு]

உயர்ந்ததா மனமொன்றின் உரிமை பூண்டுலகினிலே அயர்ந்திடா தனிசெய்த அன்னை தேவியர் தந்தாலும் அணையாத சோதியாய் அலரும் பகலுமொரு துணையாகவே நீ துலங்கு.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

3/6, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [14493]

## சாயி பொன்விழா கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், அக். 19
ஸ்ரீ சத்யசாயி பாபாவின் பொன்விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சி எதிர் வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை திருநெல்வேலி தெற்கு சத்யசாயி சேவா சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

காலை எட்டுமணிமுதல் மாலை 4.30 மணி வரை பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சாயிபாபா அவதாரம் செய்த ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டி பல இடங்களிலும் விசேட நிகழ்ச்சிகளை சாயி மண்டலிகள் ஒழுங்கு செய்துள்ளன. (இ-3)

## உணவு முத்திரை விநியோகம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், அக். 19
பருத்தித்துறை புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உணவு முத்திரை விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் நாலாம் புள்ளிக்கும், புலோலிச் சங்கத்தில் ஐந்தாம் புள்ளிக்கும் உணவு விநியோகம் வழங்கப்பட்டிருந்த வேளையில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரின் பணிப்பை அடுத்து மேற்படி முத்திரைகளுக்கான விநியோகம் அரைகுறையில் நிறுத்தப்பட்டுள்ளது. [இ - 94]

---

எமது வாடிக்கையாளர்களுக்கு

## தீபாவளி வாழ்த்துக்கள்

உரித்தாகுக.

## வ. வடிவேல் அன் சன்ஸ்

144, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி/5322)

---

லங்கம் பிராந்திய விற்பனை நிலையக்காரரின் தீபாவளி வாழ்த்துக்கள் உங்களுக்கு உரித்தாகுக.

உரிமையாளர்:
வ. வடிவேல்

**லங்கம் பிராந்திய விற்பனை நிலையம்**

219, 221, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-5321]

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
நிமாலினி (பாப்பா)
வீரசிங்கம்

தோற்றம்: 11-4-1972
மறைவு: 25-10-1984
திதி: 19 10 1990



மலர் ஒன்று மலர்ந்து நறுமணம் வீசுவதுபோல் உந்தன் நினைவு மலரும் எங்கள் அனைவரது மனதிலும் நீங்காத மணம் வீசுகின்ற மகளே! பதின்மூன்று ஆண்டுகள் உயிர்த் துடிப்புள்ள மலரும் உன் முகம் கண்ட நாங்கள் இந்த ஆறு ஆண்டுகள் ஓடிமறைந்த உன் நிழற்படம் கண்டு தவியாய்த் தவிக்கின்றோம்.

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொள்ளச் சென்று விட்டீர்.

உன் நினைவில் உதிரும் கண்ணீர் பூக்களை மாலையாகத் தொடுக்கின்றோம்.

உமது நினைவால் துயருறும்:
அன்புள்ள: அப்பா, அம்மா,
பாசமுள்ள உடன் பிறப்புக்கள்: வீ. லெனின்ராஜா,
வீ. பாமினி, வீ, திபராஜா, வீ. தயாழினி,
அன்புள்ள: அம்மம்மா, அப்பம்மா,
மற்றும் உற்றார், உறவினர்.

34/1. இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். [13479]

## அந்தியேட்டி அழைப்பு

வேலணை மேற்கின் வான்முகடு கலங்கிய அனர்த்தங்களால் விண்ணெய்திய அமரர்கள்



**ஆறுமுகம் குணசிங்கம்**

மண்ணில்:
— 1930
விண்ணில்:
29 — 08 — 1990



**திருமதி செல்லத்துரை பூரணம்மா**

மண்ணில்:
17 — 07 — 1907
விண்ணில்:
21 — 09 — 1990



**செல்லத்துரை சபாநாதன் துணைவி சொர்ணேஸ்வரி**

மண்ணில் தலைவன்:
05 — 11 — 1942
தலைவி: 07 — 02 — 1952
விண்ணில்:
24 — 08 — 1990

(தாய், மகன், மருமகள், மருமகன்) ஆகியோரின் அந்தியேட்டி 21 - 10 - 90 ஞாயிறு காலை 5 00 மணிக்கு சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும் சபிண்டீகரணம் அன்று நண்பகல் வேலணை மேற்கு 'மனோகரம்' 'மதுரா' மனைகளிலும் நடைபெறும். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமையை மன்னித்து சுற்றத்தார், உறவினர், நண்பர்களை வைபவங்களில் பங்கு கொள்ளுமாறு அழைக்கும்


திருமதி செல்வநாயகி குணசிங்கம். சை, பார்த்திபன் - மனோகரி தம்பதிகள்.

செ. கார்த்திகேசு. அஞ்சல் பரிசோதகர் அம்பலவாணர், செ. கணேசலிங்கமும் அவர்கள் குடும்பத்தினரும்.

அப்பா அம்மாவை இழந்த சனி அமுது, மதிவதனன், காண்டீபன், மதுரா, சு. துரை (இளந் தென்றல்) திருமதி சீ. ... ஐ. கோடீஸ்வரன்.

[14254]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. தப்பிரராசா இரத்தினகோபால்
தோற்றம்: (19 - 01 - 1940)
திருமதி இரத்தினகோபால் பராசக்தி
[தோற்றம்: 18 - 09 - 1944]
செல்வன் இரத்தினகோபால் சக்திபாலன்
[தோற்றம்: 21 08 - 1980]
மறைவு: 19 - 10 - 1987

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

8, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
தங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.
(14486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மத சுதந்திரம் பறிப்பு

யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில், பாதுகாப்புப் படைகளின் வசதிக்காக, தாக்குதல்களை நடத்துவதற்கு வசதியாக அடிக்கடி ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுகிறது

மக்களுக்கு சரியான அறிவித்தல் கொடாமல், ஊரடங்கு என்று பெயருக்குத் தகவல் கொடுத்துவிட்டு வானத்திலிருந்து அதனை அமுல் செய்யவும் முயற்சிக்கின்றனர் படையினர்! வீதியால் செல்லும் ஒன்றுமறியாத அப்பாவிகளை ஹெலி பொம்மர்கள் மூலம் கொல்வதற்கான சதியாகவே ஊரடங்கு மாறிவிட்டது.

இந்தச் சதி இந்துக்களின் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளித் திருநாளன்றும் திடீரென அமுல் நடத்தப்பட்டது. யாழ் குடாநாட்டு மக்கள் தீபாவளியை பெரும் எடுப்பில் கொண்டாடும் மனோநிலையில் இருக்கவில்லை என்பது வேறு. ஆனால் அன்றைய தினம் ஆண்டவன் சந்நிதிக்குச் சென்று, "அநியாயங்களையும், அதர்மத்தையும் மாய்த்து, நிர்கதியையும் நிர்மூலத்தையும் நிறுத்தி, தர்மத்தை நிலைநாட்டி எங்களுக்கு நிம்மதியைத் தா" என்று ஆண்டவனிடம் இறைஞ்சுவதற்கு அரசு தடை விதித்தது!

அக்கிரமமும் அசுரத்தனமும் அழிக்கப்பட்டதை நினைவுபடுத்தும் ஒரு நாளாகவே தீபாவளி விளங்குகிறது. இன்று நடக்கும் அறத்துக்குப் புறம்பான கொடுமைகளை நீக்குமாறு இறைஞ்சுவதற்குப் பொருத்தமான சிறப்பு தினமாகக் கொள்ளத் தக்கது தீபாவளி.

ஆனால் யாழ்ப்பாணத்து மக்கள் அந்த இறைவழிபாடு செய்வதற்கான மத சுதந்திரத்தை ஊரடங்குச் சதி மூலம் அரசு தடுத்து விட்டது.

தீபாவளி அன்று விடிந்ததும், குடாநாட்டு மக்கள் குண்டுகளையும் ஷெல்களையும்தான் பார்க்க நேர்ந்தது கண் விழிக்கும் போது குண்டு, ஷெல், ரொக்கட்டுகளின் பயங்கரச் சத்தம் தான் "முழுவியளம்"; அபசகுனம்!

வலிகாமம் வடக்குப்பகுதி மக்களுக்கோ தீபாவளித் தினம் முழுவதுமே உயிர்ச் சோதனை நாள் சகடை, பொம்மர், ஹெலி என்று மாறி மாறி வந்த அசுரர்கள் இடைவிடாது மக்கள் மீது, அவர்கள் குடியிருப்புகள் மீது கடுங்கணைகளை எய்தனர். படையினருக்கும், சிங்கள மக்களுக்கும் தெய்வ ஆசி வேண்டி பௌத்த நிகழ்ச்சிகளை அரசாங்கமே ஒழுங்கு செய்து நடத்துகிறது. ஆனால் இந்து மக்களின் இறைவழிபாட்டுச் சுதந்திரத்தை தீபாவளி தினத்தன்று தட்டிப் பறித்து விட்டது. இது கொடுமையிலும் கொடுமை.

பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளை அன்றைக்கு நிறுத்தி வைத்திருக்க முடியாதா? தென்னிலங்கைக் கிளர்ச்சியின் போது, எசல பெரஹரா அன்று கண்டியில் ஊரடங்கு விதித்து பௌத்தர்களின் வழிபாட்டைத் தடுத்தார்களா?

யாழ்ப்பாணத்தில் மட்டும், அசுரத்தனம் ஒழிக்கப்பட்ட நினைவு நாளில் இப்படி ஓர் அசுரத்தனம்!

# யாழ். நகரப்பகுதிக்கு உடனடியாக மின்சாரம் வழங்கப்படமாட்டாது

## திருத்த வேலைகளுக்கு உபகரணங்கள் இல்லை

யாழ்ப்பாணம், அக். 19

யாழ் நகரப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் எட்டு மின்மாற்றிகளும, ஏழு கிலோ மீற்றர் தூரத்துக்கான 11 கே.வி. மின் கேபிள்களும் சேதமடைந்துள்ளன. திருத்த வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாததால் நகரப் பகுதி முழுவதற்கும் உடனடியாக மின்சாரம் வழங்கப்பட மாட்டாது.

மின்சாரசபையின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதி குருநகர். பாஷையூர். கோட்டை, பண்ணை ஆகிய பகுதிகளுக்கே மின்சாரம் வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது.

நகரத்தில் மூன்றும், கோட்டையில் ஒன்றும், தொலைத்தொடர்பு திணைக்களத்தில் ஒன்றும், குருநகரில் இரண்டும், ஹோட்டல் அசோக்குக்கு முன்பாக ஒன்றும் ஆக சேதமடைந்துள்ள மின்மாற்றிகளுக்குப் பதிலாக புதிய மின்மாற்றிகள் வந்த பின்பே மின்சாரம் வழங்க முடியும்.

அத்துடன் சேதம் அடைந்த கேபிள்களைத் திருத்த போதிய கேபிள்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பரந்தன் சந்தி அவல நிலை

மாங்குளம், அக். 19

பரந்தன் சந்தியில் ஓலைக் கொட்டில்களிலான ஒரு சில தேநீர், சர்பத் கடைகள் மட்டுமே இயங்குகின்றன.

வான் தாக்குதல் மூலம் நிர்மூலமான கடைகள் மற்றும் அரச அலுவலங்கள் தனியார் நிறுவனங்கள் மீண்டும் இயங்க முடியாத நிலையில் இருந்து வருகின்றன. (இ-94)

## நலன் புரிச்சங்க கூட்டம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்தியக் கிளை நலன் புரிச்சங்கக் கூட்டம் எதிர்வரும் 21-ஆம் திகதி காலை பத்து மணிக்கு நடைபெறும் (இ-3)

# எப்படியும் தப்பி ஓட வேண்டும் என்று படையினரை எண்ண வைத்தவை எவை?

புலிகளை எதிர்த்து நின்று தாக்குப்பிடிக்க முடியாமல் கோட்டையைக் 'கோட்டைவிட்டு' அரசாங்கப் படை ஓட்டம்பிடித்தது ஏன்?

கோட்டையில் தற்போது எஞ்சியிருப்பவற்றை ஒரு பத்திரிகையாளனுக்குரிய கண்ணோடு பார்த்தபோது இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் புலனாகின.

முதலாவது—

கோட்டையின் சுற்றுச்சுவர் எவ்வளவு அகலமானதாக இருந்தாலும் — எவ்வளவு உயரமானதாக இருந்தாலும்— எதற்கும் தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருந்தாலும்— விடுதலைப் புலிகள் கோட்டைக்குள் புகுவதைத் தடுப்பதற்கு, கோட்டைச் சுவர்களுக்கு மேலுள்ள— 12 அடி அகலமும் சுமார் 500 யார் நீளமுமுடைய கோட்டை கொத்தளத்தின் பாதை நெடுகிலும்— காவல் அரண்களை அமைத்து அதிலிருந்தவாறு அவர்களைக் கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலை படையினருக்கு இருந்தது.

கோட்டைச் சுவர் பலமானதாக இருந்தபோதிலும் இந்தக் காவல் அரண்கள் பலமானவையாக அமைக்கப்பட்டிருக்கவில்லை.

ஜூன்மாதம் திடீரென மோதல் ஏற்பட்டதனால், அதற்குமுன்னர் இந்தக்காவல் அரண்கள் முன்னேற்பாடாக — பலமுள்ளவையாக— அமைக்கும் வாய்ப்பு படையினருக்குக் கிட்டியிருக்கவில்லை.

கோட்டை முற்றுகையிடப்பட்டபின்னர். கோட்டை சுவருக்குமேல் ஏறி நின்று— சுயதீனமாகச் செயற்பட்டு—இந்தக் காவல் அரண்களை இராணுவத்தினர் அமைக்கவும் விடுதலைப்புலிகள் இடமளிக்கவில்லை.

தொடர்ந்து அடிக்கடி விடுதலைப்புலிகள் நடத்திய ஷெல், றொக்கட், பஸிலன்-2000 போன்றவற்றின் கடும் தாக்குதல்களுக்கு மத்தியில் கோட்டைச் சுவருக்குமேல் தலைகாட்டும் வாய்ப்பு படையினருக்குக் கிட்டவே இல்லை,

வெறும் பனை மரவளைகளையும், மண்மூடைகளையும் கொண்டு அமைக்கப்பட்ட காவல் அரண்கள் புலிகளின் தாக்குதல்களுக்கு அவ்

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

வப்போது இலக்காக சின்னா பின்னமாகிச் சிதறுவதும்—

அதனால் அந்தக் காவல் அரண்களில் இருந்த படையினர் உயிரிழப்பும்—

அதைப் பார்த்து மற்றைய காவல் அரண்களில் இருந்த படையினர் பயந்து, மனம் கலங்கிப்போவதும் அடிக்கடி நிகழ்ந்திருக்கவேண்டும்.

கோட்டை கொத்தளத்தில் சிதறிப்போய்க் கிடக்கும் காவல் அரண்களும், அவற்றுக்குள் இருக்கும் கட்டில்கள், மெத்தைகள் மற்றும் பாவனைப் பொருள்கள் போன்றவையும் இந்த ஊகத்தைத் தந்தன.

ஐங்கோண வடிவில் 'உள்ள கோட்டையின் எல்லைச் சுவர்களில் ஐந்து முனைகளிலும்-முருகைக் கற்களினால-காவற் கோபுரங்கள் ஏற்கனவே கட்டப்பட்டிருந்தன.

கோட்டைச் சுவருடன் சேர்ந்து உயரமாக இந்தக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

கோட்டைச்சுவர் 12 அடி அகலமானதாக இருந்த போதிலும், ஒடுங்கிச்செல்லும் முனைப்பகுதிச் சுவர்களும் அவற்றில் அமைக்கப்பட்ட காவல் கோபுரங்களும் அவ்வளவு பலமானவையாகக் காணப்படவில்லை.

### தாக்குப் பிடிக்கவில்லை

370 வருடங்களுக்கு முன்னர்— இக்கோட்டை கட்டப்பட்ட காலத்தில்— பாவனையில் இருந்த ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளுக்கு கோட்டையின் ஐந்துமுனைக் காவற்கோபுரங்களும் தாக்குப்பிடிக்கக்கூடியவையாக இருந்திருக்கக்கூடும்

ஆனால் புலிகளின் வெடித் தாக்குதல்களுக்கு அவை தாக்குப்பிடிக்கவில்லை.

ஐந்து காவற் கோபுரங்களும் சேதமுற்றுக்கிடந்தன. அவற்றினுள்ளே சேதமுற்ற நிலையில் கிடந்த தளபாடங்கள் மற்றும் கட்டில்கள், குட்கேஸ்கள் ஆகியவற்றைப் பார்க்கும் போது அந்தக் கோபுரங்கள் சேதமுறும் வரை படையினரின் பாவனையில் அவை இருந்தன என்பதையும்—

அவை சேதமுற்று உருக்குலையும் போது அவற்றினுள் இருந்த படையினரும் உயிரிழந்திருக்கலாம் அல்லது காயமுற்றிருக்கலாம் என்பதையும் உணர முடிந்தது.

### மனோபலம் இருந்ததா?

இரண்டாவது-

கோட்டையைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய விதத்தில் குறையாத ஆட்பலத்தையும், மனோ வலிமையையும் கோட்டைக்குள் இருந்த ஸ்ரீலங்காப்படை கொண்டிருந்ததா என்பதும் சந்தேகமே.

கோட்டை முற்றுகைக்குள்ளான போது அங்கு சுமார் 80 இராணுவத்தினரும், 120 பொலீஸாரும் சிக்கிக் கொண்டனர்.

பொலீஸாரில் பெரும்பான்மையானோர் தமிழர்களும் முஸ்லிம்களுமே.

இவர்களும் உண்மையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய போராடும் மனவலிமையும், மனப்பூர்வமான உணர்வையும் கொண்டிருந்தார்களா என்பதும் கேள்விக் குறியே

இராணுவத்தினரின் கெடுபிடிகளினாலும் தமது உயிர்ப் பாதுகாப்பிற்காகவும், கோட்டைக்குள் இருந்த பொலீஸார் ஆயுதங்களைத் தூக்கி வைத்திருந்தாலும் அவற்றை லாகவமாகக் கையாளும் திறமை இவர்களுக்கு இருந்ததா என்பதும் ஐயமே......?!

உள்ளே இருந்த 80 இராணுவச் சிப்பாய்களும் இந்த விடயத்தில் போதிய பயிற்சியும், அனுபவமும் உடையவர்களாகவும் ஸ்ரீலங்கா அரசுக்கு விசுவாசம் மிக்கவர்களாகவும் இருந்திருந்தாலும் கூட, சுமார் ஐநூறு யார் நீளமுள்ள கோட்டைச் சுவர் பகுதியை முற்றாகத் தங்கள் கட்டுப்பாட்டில்- தாக்குப்பிடித்து வைத்திருக்கக் கூடிய ஆள் எண்ணிக்கைப் பலத்தைக் கொண்டிருக்கவில்லை என்றே தோன்றுகிறது.

### நிலை குலைந்தனர்

இந்தக் காரணங்களைவிட மூன்றாவதாக விடுதலைப்புலிகள் எடுத்த சில நடவடிக்கைகள் உள்ளேயிருந்த படையினரை நிலை குலையச் செய்தன.

அதனால் எவ்வளவு விரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

- கூர்விழியான் -

# கந்தபுராணக் கருவூலம்

படைப்புத் தொழில் புரியும் பிரமதேவரின் பத்துப் புதல்வர்களில் மூத்தவன் தக்கன். தந்தையிடம் வேதங்களை ஓதி உணர்ந்து, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். சிவபிரானின் பெருமைகளை அறிந்து, அவரை நோக்கி ஆயிரம் ஆண்டுகள் அரிய பெரிய தவம் இயற்றினான்.

தக்கனின் தவத்துக்கு இரங்கிய சிவபெருமான் அவன் வேண்டியவாறு "சகல உல

### ஸ்கந்தஷஷ்டி சிறப்பம்சம்

கங்களையும் ஆட்சி செய்யும் ஆணையையும், உலக மாதாவாகிய உமாதேவி அவனுக்கு மகளாக அவதரித்து தன்னை மணம் புரிந்து மருமனாகும் பேற்றையும், தன்னை வணங்குவோர் அனைவரும் அவனை வணங்கவும்" வரம் கொடுத்து மறைந்தருளினார்.

உமையம்மை தக்கனின் மகளாக அவதரித்து தாட்சாயணி என்னும் நாமத்துடன் வளர்ந்து மணப்பருவம் எய்தினார். திருமண நாளன்று அம்பிகையின் கரத்தை சிவபிரான் கைகள் மீது வைத்துக் கன்னிகாதானம் செய்து கொடுத்தான் தக்கன். பிரமதேவர் திருமணச்சடங்குகளை இயற்றத் தொடங்கினார். இறைவன் திடீரென மறைந்தருளினார்.

சடங்குகள் பூர்த்தியடையு முன்பே மறைந்த சிவபிரான் மேல் ஆறாத கோபம் கொண்டான் தக்கன். தாட்சாயணி மனங்கலங்கி மீண்டும் கன்னிமாடத்திற்குச் சென்று சிவபிரானை நோக்கி தவத்தை மேற்கொண்டார். சிலநாள் கழிந்தபின், சிவபிரான் அந்தண வேடம் தாங்கி கன்னிமாடத்துக்கு எழுந்தருளி, தாட்சாயணிக்குத் தன் திருவுருவைக் காட்டி, [illegible] இருத்திக் கைலையங்கிரிக்குக் கொண்டு சென்றார்.

தாய் தந்தையர் அறியாமல் பெண்ணைக் கவர்ந்து சென்ற சிவபிரானைத் தக்கன் பலவாறு நிந்தனை செய்தான். நன்றிமறந்தவன். சிவபிரானைத் தனது மருமகன் என்று செருக்குற்றான் தேவரையும் மூவரையும் அழைத்து "இன்று முதல் நீவிர் சிவனை வணங்குதல் கூடாது என்னையே வணங்க வேண்டும்" என்று ஆணையிட்டான். செய்வதறியாத தேவர்கள் தக்கனின் ஆணைக்கடு அடங்கி ஒடுங்கினர். சிவபிரானை மறந்தனர்.

தக்கனின் ஆணையால் துயரமடைந்த பிரமதேவர் ஒரு யாகம்செய்தார். யாகசாலையில் சிவபெருமானின் பிரதிநிதியாக நந்தி நடுநாயகமாக வீற்றிருந்து அவிப்பாகம் ஏற்பதைவெறுத்ததக்கன் சிவபிரானைப் பலவாறு நிந்தனை செய்து அவிப் பாகத்தைச் சிவனுக்குக் கொடுக்க வேண்டாம் என்று தந்தையைத் தடுத்தான்.

சிவ நிந்தையைத் தாங்கொணாத நந்தியெம்பெருமான் சீற்றமடைந்து தக்கனை நோக்கி "இரக்கம் என்பது இல்லாத கெட்ட மனமுடைய பேயனே, உன்னை ஆதரிக்கும் இந்தக் கடவுளர் ஒரு நாள் மாண்டு மீண்டும் உயிர் பெற்று எழுந்து அதன் தொடர்பாக அளவில்லாத யுக காலம் சூரபன்மன் என்னும் அசுரனால் துன்பமடைவார்களாக" எனச் சாபமிட்டுக் கைலையங்கிரிக்கு ஏகினார்.

அவ்வாறே சிலநாள் கழித்து சிவனை மதியாது தக்கன் செய்த யாகத்தில் பங்கு கொண்ட தேவர்கள் அனைவரும் வீரபத்திரக் கடவுளால் சங்காரம் செய்யப்பட்டு சிவபிரானின் திருவருளால் [illegible] நூற்றெட்டு யுகங்கள் துன்பத்தை அனுபவித்தார்கள்.

- அழகு அருணாசலம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகரில் ஷெல் தாக்கு; 3 சிறுவர், பெண்மணி காயம்!

காரைநகர், அக். 19

காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து நேற்றுக் காலையிலும் நண்பகலிலும் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் மூன்று சிறுவர்களும் ஒரு பெண்மணியும் காயமடைந்தனர்.

அதிகாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் கருங்காலியைச் சேர்ந்த இரு சிறுவர்கள் காயமடைந்தனர். ஒரு வீடு சேதமுற்றது. கால்நடை ஒன்றும் இறந்தது.

மீண்டும் முற்பகல் 10.00 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த இளம்பெண் ஒருவரும், சிறுவன் ஒருவனும் காயமுற்றனர்.

நீலங்காட்டைச் சேர்ந்த ஈஸ்வரி தேவராசா (வயது 24) என்ற இந்த இளம்பெண் படுகாயமுற்ற நிலையில் மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ப்பட்டார். (உ-6)

# ஹெலியிலிருந்து பத்திரிகை; எடுக்கச் சென்றோருக்கு சூடு!

தென்மராட்சி, அக். 19

நேற்று முன்தினம் தீபாவளி தினத்தன்று மீசாலைப் பகுதியில் ஹெலியில் இருந்து கொழும்புப் பத்திரிகைகள் வீசப்பட்டன. அவற்றை எடுக்கச் சென்றவர்களுக்கு ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

மீசாலை பழைய ரயில் நிலையத்துக்கு அருகில் நடந்த இந்தச் சம்பவத்தில் மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் மீசாலை தெற்கைச் சேர்ந்த கு. நவரத்தினம் (வயது 42) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-117)

# மரண அறிவித்தல்கள்

## திரு. S. C. பஞ்சரத்தினம்

(பிரதம பொறியியலாளர் கட்டடத் திணைக்களம் மட்டக்களப்பு மாவட்டம்)

திரு. S. C. பஞ்சரத்தினம் மட்டக்களப்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி J. சின்னப்பா (இளைப்பாறிய கணக்குப் பதிவாளர் யாழ்ப்பாணக் கல்லூரி) இன் இளைய மகனும், காலஞ்சென்ற மனோகரியின் அன்புக் கணவரும், லக்ஸ்மன், றஞ்சிற், பாலன் ஆகியோரது அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதி ஆராதனை மட்டக்களப்பில் 19-10-1990 வெள்ளிக் கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும் அதே வேளையில் நவாலி சின்னப்பா வீதியிலுள்ள அன்னாரது சகோதரி திருமதி ஆர். ஜெயரத்தினம் அவர்களது இல்லத்தில் ஓர் ஜெப ஆராதனையும் நடைபெறும் என்பதனை அறியத் தருகிறோம்.

தகவல்:
C. ஜெயரத்தினம்

நவாலி தெற்கு,
மானிப்பாய். (14497)

## தம்பையா ஐயாத்துரை
[இடைக்காடு]

இடைக்காட்டைச் சேர்ந்த தம்பையா ஐயாத்துரை 17-10-1990 இல் காலமானார். இவர் யாழ். வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பையா - அம்மான் தம்பதிகளின் ஏக புதல்வனும், திருமதி மாணிக்கம் ஞானப்பிரகாசத்தின் அன்புச் சகோதரரும், திருமதி செங்கமலத்தின் அன்புக் கணவரும், செல்வராஜா [Metlects, கொழும்பு], சிவராஜா [உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம்], தேவராஜா [இலங்கைப் புகையிரதப் பகுதி, மருதானை], செல்வராணி, கமலராணி, நவரத்தினராஜா [யாழ். பல்கலைக்கழகம் - இரசாயனபீடம்], ஜெயரத்தினராஜா, குணரத்தினராஜா [வீரகேசரி, கொழும்பு], ஜமுனாராணி, நித்தியானந்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலட்சுமி [கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்], மனோரஞ்சிதம், நேசமலர் [யாழ். போதனா வைத்தியசாலை], இராஜேந்திரன், அருமைத்துரை, சகிலாதேவி [ஆசிரியை], சாரதாம்பிகை, குகானந்தி, சக்திதாசன் [கணக்காளர், டுபாய்] ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகுலேந்திரா [யாழ். மருத்துவ பீட மாணவர்], கருணாகரி, சத்தியேந்திரா, வாசுகி, ஸ்ரீஆனந்தா, பீஷ்மன், அரவிந்தன், கௌரிபாகன், மகேந்திரன், விமலேந்திரன், பார்த்திபன், அகிலன், சுவர்ணா, கௌதமன், பிரியங்கா, சிந்தியா, ஹம்சானந்தி ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [20-10-1990] சனிக்கிழமை காலை 10 மணிக்கு 131/1, கண்டி வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
த. ஐ. ஜெயரத்தினராஜா
[14498]

## இயக்கச்சியில் குண்டு வீச்சு

தென்மராட்சி, அக். 19

இயக்கச்சிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை இரண்டு பொம்மர்கள் குண்டுகளை வீசித் தாக்கின.

குண்டுகள் அனைத்தும் தென்னம் தோட்டங்களிலும் காடுகளிலும் வீழ்ந்து வெடித்தன. இதனால் மரங்கள் சில முறிந்தன. (ஒ-117)

## ஒருவர் பலி

குப்பிளான், அக். 19

நேற்று முன்தினம் (புதன்) இரவு பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்கு ஊரங்குணையில் ஒருவர் பலியானார்.

## 13 போராளிகள்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குணானந்தன் - இருபாலை], நெல்ஸன் [வடிவேலு ஸ்ரீ-பூநகரி] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

நேற்று இடம்பெற்ற மோதலில் கந்தையா (கந்தசாமி உதயகுமார்), தமிழ்ச் செல்வன் [மன்னார்], மரியதாஸ் டானியல் [கிருஷ்ணபிள்ளை நகுலேஸ்வரன் - மூளாய்] ரகு [கந்தசாமி - அளவெட்டி] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் ரஹீம் என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ)

## அங்கிலிகன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமீபத்தில்தான் பிரஸ்தாப தேவாலயம் புதுப்பிக்கப்பட்டிருந்தது.

புதிய தேவாலயம் கடந்த ஜூன் 25 ஆம்திகதி கொழும்பு அங்கிலிக்கன்பிஷப்பினால் திருநிலைப்படுத்தப்பட இருந்தது. நாட்டுநிலைமை காரணமாக இது நிறைவேறவில்லை. இப்போது தரைமட்டமாகி விட்டது. (ஓ)

## மல்லாகத்திலும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்ற வயோதிப மாதும் பரமேஸ்வரன் (வயது-30) என்ற இளைஞனும் காயமுற்றனர். ஐந்து வீடுகள் சேதமுற்றன.

இதேசமயம் —

மல்லாகம் பங்களா ஒழுங்கைப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் மரக்காலை ஒன்று முற்றாகச் சேதமுற்றது. அருகில் இருந்த வீடுகளும் சிறிது சேதமடைந்தன. (உ-ரி)

## கட்டுவன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முற்றன.

மீண்டும் 11 மணியளவிலும் சீனச்சகடை கட்டுவன் பகுதியில் குண்டுகளை வீசியது.

சீனச்சகடையின் நேற்றைய அட்டகாசத்தால் பல வீடுகள், கட்டடங்கள் முற்றாக நாசமாகின.

ஹெலிக்கொப்டர்களும் இப்பகுதிகளில் கண்டபடி தாக்குதல்களை நடத்திக் கொண்டே இருந்தன.

பரவலாக ஷெல் வீச்சுகளும் நடத்தப்பட்டன. (ஓ-ரி)

## எப்படியும்...

(3 ஆம் பக்த் தொடர்ச்சி)

வாக முடியுமோ, அவ்வளவு விரைவாக கோட்டையை விட்டு ஓடித் தப்ப வேண்டும் என்ற முடிவுக்கு ஸ்ரீலங்கா படையணி வந்திருக்கிறது.

ஸ்ரீலங்கா படை ஓடித்தப்ப வேண்டும் என்ற நிலையை உருவாக்கிய- விடுதலைப் புலிகளின் அந்த நடவடிக்கைகள் என்ன? அதனால்கோட்டைக்குள் ஏற்பட்ட சிக்கல்கள் என்ன?

[illegible] பார்ப்போம்.

(வளரும்)

# புலிகள் வென்றால் தான் ஈழத் தமிழருக்கு பாதுகாப்பு

## ஜெயலலிதா கூறுகிறார்

சென்னை, அக். 19

சிங்களப் படைகளுக்கு எதிரான போரில் விடுதலைப் புலிகள் வெல்லவேண்டும். புலிகள் வென்றால் தான் ஈழத்தமிழர்கள் பாதுகாக்கப் படுவார்கள்.

—இவ்வாறு கூறினார் அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதா.

சென்னையில் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி அவர் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:-

சிங்களப்படைகளுக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடந்த சில மாதங்களாக வீராவேசமாகப் போராடிவருகின்றார்கள்.

இப்போராட்டத்தில் விடுதலைப் புலிகள் வெற்றிபெற வேண்டும். அப்போதுதான் இலங்கைத் தமிழர் பாதுகாக்கப்படுவர்.

இன்று தமிழக மக்களுக்கு உள்ள ஒரேவழி, விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஆதரிப்பதுதான். அதைத் தவிர வேறெதுவும் இல்லை— என்றார். (உ-எ)

# சடலங்கள் சுன்னாகத்தில்

வயாவிளான் பகுதியில் இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமான இரு பொதுமக்களின் பூதவுடல்கள் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டு, சுன்னாகம் பிரதேச காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் அடையாளம் காட்டி, பூதவுடல்களை எடுத்துச் செல்லுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கேட்டுள்ளது. (ஓ)

# கோட்டையில் தகனம்!

யாழ்ப்பாணம், அக். 19

வயாவிளான் மோதலில் வீரமரணமடைந்த விக்டர் (உடப்பு, புத்தளம்) என்ற போராளியின் புகழுடம்பு நேற்று யாழ். கோட்டைக்கு அருகே தகனம் செய்யப்பட்டது.

நெல்ஸன் என்ற போராளியின் புகழுடம்பு நாவாந்துறையிலும், ஐயன் என்ற போராளியின் புகழுடம்பு நீர்வேலியிலும் தகனம் செய்யப்பட்டன.

# தெல்லியூர் ஆஸ்பத்திரி நேற்றுடன் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், அக். 19

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை நேற்றுடன் மூடப்பட்டது.

ஆஸ்பத்திரிப் பகுதியிலும், அதன் சுற்றாடல்களிலும் விமானத் தாக்குதல்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து அது மூடப்பட்டது.

அங்கிருந்த நோயாளர்கள் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

வைத்தியசாலை ஊழியர்களும் சங்கானையில் கடமையாற்றுகிறார்கள்.

தெல்லிப்பளை வைத்தியசாலை அம்புலன்ஸ் துர்க்கை அம்மன் ஆலயத்தில் தரித்து நிற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றும் வைத்தியசாலைப் பகுதியில் பொம்மர் தாக்குதல் இடம்பெற்றது. ஹெலியும் அங்கு வேட்டுக்களைத் தீர்த்தது. (அ-3-5)

## வயாவிளான்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கும் படையினருக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது.

பொம்மர்கள், அவ்ரோ, சகடை மற்றும் ஹெலிக்கொப்டர்கள் வான் தாக்குதல்களை நடத்த —

ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு படையினர் முன்னேற முயர்சிப்பதாகவும் —

விடுதலைப் புலிகள் அவர்களை முன்னேற விடாது பதில் தாக்குதல் நடத்தி வருவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்த மோதலில் ஸ்ரீலங்காப் படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் —

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து பல அம்புலன்ஸ்கள் காயமடைந்த படையினரை ஏற்றிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது என்றும் கொழும்பில் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

ஆனால் பலாலி இராணுவ முகாம் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் 4 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும், 43 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன

இரண்டு நாட்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதல்களினால் வயாவிளான்பகுதி தொடர்ந்து அதிர்ந்து வருகிறது.

[உ-68-3-5]

## நாள் முழுதும்...

பகுதியைச் சுற்றி வட்டமிட்டுப் பல்வேறு நிலைகளிலும் குண்டுகளைப் பொழிந்தன.

மீண்டும் 11 மணியளவில் சீனடச் 'சகடை' விமானம் வந்து பயங்கரமாகக் குண்டுகளைப் போட்டது.

மாலையிலும் இரவு 7 மணி வரையும்ஹெலிக்கொப்டர்கள், பொம்மர்கள், அவ்ரோக்கள் மாறிமாறித் தமது தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருந்தன.

இதேவேளை -

சகடை விமானம் நேற்றுக் காலையில் இருந்து மாலை வரை மூன்று தடவைகள் மேற்கொண்ட தாக்குதலில்-

ஊரங்குனை ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் உள்ள ஐந்து வீடுகளும் -

கட்டுவன் காசிஅம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள ஒரு மில் மற்றும் மூன்று வீடுகளும் -

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயப் பகுதியில் 5 வீடுகளும் -

ஏழாலை முனியப்பர் ஆலயம், ஏழாலை வடக்கு பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கு அருகில் உள்ள ஐந்து வீடுகளும் பெரும் சேதமுற்றன. (அ-68-3)

## உரும்பராயில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருணா (17), யசோ (16), எவ்லின் நிரோஷன் (11), சிவதீபன் (16), சஜீதா (7), கே. சாந்தா (26), அரியமலர் (28).

காயமடைந்தவர்களில் அனேகர் உரும்பராய், செல்வபுரத்தைச் சேர்ந்தவர்கள்.

உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு சமீபமாகவும் குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

அவ்வேளை வீடு ஒன்றின் பின்பகுதி சேதமுற்றது.

(ஒ-154-3-5-72-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவ[illegible] 298/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org